பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.29.09.2020

**நிகழும் திருவள்ளுவராண்டு செப்டம்பர் மாதம் 29ம் நாள் (29.09.2020) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செப்டம்பர் 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.1247, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1248, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் செப்டம்பர் 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1249, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் செப்டம்பர் 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1250, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.5 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் டெங்கு தடுப்புப் பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து வீடுகளில் தண்ணீர் சேமித்து வைக்கும், கலன்கள், தண்ணீர் தொட்டிகளில் டெங்கு காய்ச்சலை பரப்பக்கூடிய கொசுப்புழுக்களின் உற்பத்தியை ஒழிப்பதற்கு பயன்படுத்த கூடிய டெமிபாஸ் 50% EC என்ற மருந்து களப்பணி உதவியாளரின் அறிக்கையின்படி அலுவலக இருப்பில் குறைவாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன் பொருட்டு பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் கீழ்க்கண்ட கொசுப்புழு ஒழிப்பு மருந்தினை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.<br>டெமிபாஸ் 50% EC – 300 லிட்டர்<br>மேற்கண்ட கொசுப்புழு ஒழிப்பு மருந்தினை டெங்கு நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதி தமிழ்நாடு மருத்துவ சேவை கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனமான பாராமவுண்ட் பெஸ்டிசைடு லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.2.50 லட்சம் உத்தேச செலவினத்தில் நேரடியாகக கொள்முதல் செய்வதற்கு நகர் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக் குறிப்பு** |

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தமிழ்நாடு மருத்துவ சேவை கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனமான பாராமவுண்ட் பெஸ்டிசைடு லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.2.50 லட்சம் உத்தேச செலவினத்தில் நேரடியாகக கொள்முதல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1251, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.6

பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை ஆணை எண்.49342/02/79–2 நாள். 30.06.1979ன் படியும், சுகாதாரம் மற்றும் குடும்ப கட்டுப்பாட்டுத்துறை ஆணை எண்.2684, நாள் 12.11.1971ன் படியும், கூடுதல் இயக்குநர் அவர்களின் நேர்முக கடிதம் எண்.47420/2005/ஜெ2 நாள் 02.07.2009ன் படியும், துப்புரவு பணியில் ஈடுபடும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு கையுறை, காலுறை, முகவுறை, ஒளிரும் ஜாக்கெட், பாதுகாப்பு தொப்பி மற்றும் மழை கோட் போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் அணிந்து கொண்டுதான் துப்புரவு பணியல் ஈடுபட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, இந்நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகி விட்டப்படியாலும், தற்போது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குப்பைகள் தரம் பிரித்து வாங்குதல் மற்றும் கலவை உரம் தயாரித்தல் போன்ற பணிகள் மற்றும் கொரோனா நோய் தடுப்புப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுவதாலும் கீழ்க்கண்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க வேண்டியுள்ளது.

| வ.எண் | கொள் முதல் செய்ய வேண்டிய பாதுகாப்பு உபகரணங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | Reflecting T. Shirt | 66 |
| 2. | ISO Grade Helmate | 40 |
| 3. | Acid Proof Nylon Glouse | 660 (sets) |
| 4. | Cotton Face Mask | 660 (Nos) |
| 5. | Safety Boots | 40 |
| 6 | Rain coats | 81 |

மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்களை ரூ.3.00 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய நகர் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பாதுகாப்பு உபகரணங்களை ரூ.3.00 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1252, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.7

பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு 2020–2021ம் ஆண்டிற்கான தளவாடச் சாமான்களை துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் துப்புரவு அலுவலரின் அறிக்கையின்படி கீழ்க்கண்ட விபரங்களின் படி வாங்க வேண்டியுள்ளது.

| வ.எண் | தளவாடச் சாமான்கள் விபரம் | எண்ணிக்கை | வ.எண் | தளவாடச் சாமான்கள் விபரம் | எண்ணி |
|---|---|---|---|---|---|
| 1. | மண்வெட்டி | 30 | 8. | தெருகூட்டுமாறு பிடியுடன் | 75 |
| 2. | கடப்பாறை | 10 | 9. | வாறுகால் கரண்டி | 25 |
| 3. | அரிவாள் | 20 | 10. | குப்பை அள்ளும் கொக்கி | 25 |
| 4. | சம்மட்டி | 5 | 11. | தெரு கூட்டும் பிரஸ் பிடியுடன் | 50 |
| 5. | தகரக்கூடை | 50 | 12. | வாங்கருவாள் பிடியுடன் | 10 |
| 6. | தகரக்கையோடு | 50 | 13. | தென்னங்கூட்டுமாறு | 100 |
| 7. | இரும்புவாளி | 20 | | | |

மேற்கண்ட தளவாடச்சாமான்களை ரூ.2.00 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தளவாடச்சாமான்களை ரூ.2.00 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1253, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.8

இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் சுகாதார அலுவலரின் அறிக்கையின்படி பொது சுகாதாரப் பணியாளர்கள், பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுனர்கள் மற்றும் துலக்குனர்களுக்கு 2020 –2021ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் காலணிகள் வழங்க வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| | **பொது சுகாதாரப்பிரிவு** | **எண்ணிக்கை** |
| | ஆண் துப்புரவு பணியாளர்கள் | 44 |
| | பெண் துப்புரவு பணியாளர்கள் | 22 |
| | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | 8 |
| | பொது சுகாதார ஓட்டுனர்கள் | 6 |
| | பொது சுகாதார துலக்குனர்கள் | 1 |
| | மருத்துவ ஆயா | 3 |
| | களப்பணி உதவியாளர் | 1 |
| | **பொதுப்பிரிவு** | **எண்ணிக்கை** |
| | அலுவலக உதவியாளர்கள் | 5 |
| | காவலர்கள் | 6 |
| | **பொறியியல் பிரிவு** | **எண்ணிக்கை** |
| | அலுவலகப் பணியாளர்கள், மின் பிரிவு பணியாளர்கள், குடிநீர் பணியாளர்கள் | 13 |
| | ஓட்டுனர்கள் | 3 |

மேற்கண்ட பணியாளர்களில் ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி காக்கி பாலிஸ்டர் பேண்ட் சட்டைகள், பெண் துப்புரவுப் பணியாளர்களுக்கு மற்றும் மருத்துவ ஆயாக்களுக்கு இரண்டு ஜோடி சேலை, ஜாக்கெட்டுகள், பொதுப்பிரிவு அலுவலக உதவியாளர்களுக்கு இரண்டு ஜோடி வெள்ளை பாலிஸ்டர் பேண்ட் சட்டைகள், குடிநீர் பிரிவு, மின் பிரிவு பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி காக்கி பாலிஸ்டர் பேண்ட் சட்டைகள், துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள், ஓட்டுனர்கள், துலக்குனர், களப்பணி உதவியாளர் போன்றவர்களுக்கு இரண்டு ஜோடி காக்கி பாலிஸ்டர் பேண்ட் மற்றும் இரண்டு ஜோடி வெள்ளை பாலிஸ்டர் சட்டைகள் மற்றும் அவைகளுக்குண்டான தையல் கூலி மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், துப்புரவு பணியாளர்களுக்கு காலணிகளும், ஓட்டுனர்களுக்கு தோல் ஷீக்களும் ரூ.3.50 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் அரசு நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கும், காலணிகள் மற்றும் தோல் ஷீக்களை உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி கொள்முதல் செய்வதற்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. சீருடைகளை ரூ.3.50 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் அரசு நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கும், காலணிகள் மற்றும் தோல் ஷீக்களை உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி கொள்முதல் செய்வதற்கும்மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1254, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.9

பரமக்குடி நகராட்சி பொது சுகாதார டிராக்டர் டிரைலர் வாகனம் TN65C8406க்கு வருடாந்திர தகுதிச்சான்று 15.10.2020ம் தேதியுடன் முடிவடைவதாகவும் புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்கு பழுது பணிகள்

| | |
|---|---|
| | அனைத்தும் பார்த்து தருமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநர் தெரிவித்ததன் அடிப்படையில் பழுது பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் கணக்கிட சம்மந்தப்பட்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் 1) பாபு ஆட்டோமொபைல்ஸ் இன்ஜினியரின் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனம் ரூ.91300க்கும் 2) ஸ்ரீ தீபா என்டர்பிரைசஸ் பரமக்குடி என்ற நிறுவனம் ரூ.98550க்கும் விலைப்புள்ளிகள் அளித்துள்ளார்கள். அதன்படி ரூ.95000 உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பழுது பணிகள் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. ரூ.95000 உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பழுது பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1255, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.10 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதார டிராக்டர் டிரைலர் வாகனம் TN65C8406க்கு நான்கு டயர்களும் முற்றிலும் தேய்மானம் அடைந்துள்ளதால் வாகனம் அடிக்கடி பஞ்சர் ஆகி வாகனத்தை இயக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் அதன் பொருட்டு புதிதாக நான்கு டயர்கள் (முன்புற டயர்கள்) 6X16– 2டயர்கள், 12x4x28– 2 டயர்கள் ) வாங்கி வழங்குமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநர் தெரிவித்ததன் அடிப்படையில் புதிய டயர்கள் கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் கணக்கிட சம்மந்தப்பட்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் 1) ரத்னா டயர்ஸ் பரமக்குடி என்ற நிறுவனம் ரூ.52400க்கும் 2) அம்ரித்தா டயர்ஸ் பரமக்குடி என்ற நிறுவனம் ரூ.53200க்கும் விலைப்புள்ளிகள் அளித்துள்ளார்கள். அதன்படி ரூ.55000/– உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய டயர்கள் கொள்முதல் செய்ய நகர் மன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. ரூ.55000/– உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய டயர்கள் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1256, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.11 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலையில் இருந்து தேசிய நெடுஞ்சாலையில் இருபுறமும் மழைநீர் வடிகால் கட்டும் பணி தேசிய நெடுஞ்சாலைத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் சாலையில் இருபுறமும் உள்ள குடிநீர் இணைப்புகள் துண்டிக்கப்படும் சூழ்நிலை உள்ளது தேசிய நெடுஞ்சாலையில் வடபுறம் மட்டும் குடிநீர் பகிர்மான குழாய் உள்ளது தென்புறம் பகிர்மான குழாய் இல்லாததால் மேற்படி துண்டிக்கப்படும் குடிநீர் குழாய் இணைப்புகளால் பொதுமக்கள் சிரமப்படுவதால் மேற்காணும் மழைநீர் வடிகாலை ஒட்டி தென்புறம் 4" பிவிசி (110 எம்எம்) பகிர்மான குழாய் மற்றும் 3" பிவிசி (90 எம்எம்) பகிர்மான குழாய் பதிக்கும் பொருட்டு (ஐந்து முனை சந்திப்பிலிருந்து அண்ணாநகர்வரை ) தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை 3,00,000/– க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறலாம். மேற்காணும் குடிநீர் பணியின் அவசியத்தை க் கருதி போர்கால அடிப்படையில் மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிப் பெற்று நகராட்சி பதிவுப்பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பி. கோவிந்தன் என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு<br><br>அலுவலகக்குறிப்பு:<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்காணும் குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிப்பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்<br>**தீர்மானம் எண்.1257, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.12 | பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019–2020ன் கீழ் பரமக்குடி |

தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.நி.சதன்பிரபாகர் அவர்கள் பரிந்துரையின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் இராமநாதபுரம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.ஆர்4/4280/2019 நாள் 22.07.2020ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பரமக்குடி அரசு பொது மருத்துவமனையில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைக்கும் பணிக்கு ரூ.4.50 இலட்சம் 04.09.2020 அன்று முதன் முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்** | **பணியின் விபரம்** | **ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுதொகையைவிட கூடுதல்/ குறைவு** |
|---|---|---|
| 1. | திரு. பி.பரிமேல் அழகர் ஒப்பந்ததாரர், பரமக்குடி | 0.06% மதிப்பீட்டு விலையை விட குறைவு |
| 2. | திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்ததாரர், பரமக்குடி | 0.92% மதிப்பீட்டு விலையை விட அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.பரிமேல் அழகர் ஒப்பந்ததாரரின்ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேற்காணும் திட்டப்பணியின் அவசியத்தை கருதி பணியினை விரைவாக முடிக்கும் பொருட்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றத்தின் அனுமதிக்கு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு பணியினை விரைவாக உரிய காலத்தில் முடிக்கும் பொருட்டு மன்ற அனுமதியை நோக்கி தனி அலுவலரின் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1258, அனுமதிக்கப்பட்டது.**

தனிஅலுவலர்
பரமக்குடி நகராட்சி